நூற்றாண்டு நினைவு மலர்.
(1894 - 1994)



# சின்னமடுச் செபமாலை மாதாவின் ஆலய வரலாறு.

காவலூர்க் கவிஞன்
ஞா. ம. செல்வராசா
எழுதியது.

நூற்றாண்டுநினைவுமலர்
(1894 - 1994)

# சின்னமடுச் செபமாலை மாதாவின்
# ஆலய வரலாறு

நாரந்தனை, மாசில்லாக் கூட்டத் தலைவியும்
மரியாயின் சேனைச் செயலாளருமான
திருமதி சவினா நீக்கலஸ் அவர்களின்
விருப்பிற்கிணங்க

காவலூர்க் கவிஞன்
ஞா. ம. செல்வராசா
எழுதியது
(2 ம் பதிப்பு)
1994

*சரித்திர ஆசிரியரும், ஊர்காவற்றுறைப்*
*பங்குத்தந்தையுமாயிருந்த*
*காலஞ்சென்ற*

## வண. S A ஞானப்பிரகாசம் அடிகளார் முதலாம் பதிப்புக்கு வழங்கிய

# மதிப்புரை

*யாழ் மறைமாவட்டத்தின் பேர்பெற்ற யாத்திரைத் தலங்களுள் சின்னமடுவும் ஒன்று: இத்திருத்தல யாத்திரை 1895 ம் ஆண்டு ஆடி மாதம் 14-ந் திகதி ஒரு சிறு கொட்டிற் கோவிலில் முதற் திருப்பலி நிறைவேற்றப்பட்டு ஆரம்பிக் கப்பட்டதென வரலாறு கூறிகிறது.*

*ஆனால், சரவணைவில் கத்தோயிக்க திருமறை 1895 ம் ஆண்டுதான் ஆரம்பிக்கப்பட்டதோ அல்லது அதற்கு முன்னரே கிறிஸ்தவங்கள் அங்கு இருந்தார்களோ என்றறியப் பக்தர்கள் விரும்பு வார்கள் 1816 ம் ஆண்டு தொடக்கம் சரவணையில் நானா சாதியினரிலும் திருமுழு க்குப்பெற்ற கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். மேற்படி ஆராய்ச்சியின் விளைவையும் தேவதா யாரின் புதுமை நிறைந்த இத் தலத்தின் சரிதையையும் காவலூர்க் கவிஞன் ஞா. ம. செல்வராசா எழுதி நூல்வடிவில் தந்திருக்கிறார்.*

*நம் முன்னோரின் சமய சாசனங்கள் பிற்சந்ததியினருக்கு அற்றுப்போகாது காப்பாற் றித்தந்த செல்வராசனுக்குப் பக்தர்கள் என்றும் நன்றியுள்ளவர்களாய் இருப்பார்கள்.*

Sgd/Fr. S. A. Gnanapiragasam
*Parish Priest*
*Kayts*

*ஊர்காவற்றுறை*
*19 - 7 - 62*

# இரண்டாம் பதிப்பின்
# முன்னுரை

சின்னமடுச் செபமாலை மாதாவின் திருப் பதியின் நூற்றாண்டு விழாவை இவ்வாண்டு நாம் கொண்டாடுகின்றோம் துர்அதிஷ்ட வசமாக காலத்தின் கோலத்தால் நாம் அன்னையின் திருப்பதியில் இவ்விழாவைக் கொண்டாட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம் என்பதை எண்ணும்போது சொல்லொ ணாத்துயரமே எம்மை வாட்டும்

பெரியமடு மாதாவின் திருச்சேத்திரத்துக்கு யாத்திரைபோகமுடியாத பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சரவணை சின்னமடுமாதாவின் திருத்தலம்வந்து அந்த அன்னையின் அருள் வேண்டி மனத்துயர் தீர்க்க உதவியாக இத்திருப்பதி திருச்சபையால் யாத்திரைத்தல மாகப் பிரகடனப்படுத்தப்பட்டது என்பதை வரலாறு கூறும்.

ஒருநூற்றாண்டுகாலமாக இத்திருத்தலத்தில் அன்னையின் அருள்பாலிக்கப்பட்டு அவளின் பரிந்துரையால் எண்ணற்ற நன்மைகளைப்பெற்ற நாம் இப்போது இடம்பெயர்ந்து இன்னற் பட்டாலும் தேவதாயார் மட்டில் நன்றியற்ற வர்களாய் இருக்கமுடியாது தாயை மறந்தவன் பேயினும் இழிந்தவன் அல்லவா? எனவே தேவதாயாரின் பக்தர்கள் நாம் எங்கிருந்தாலும் நூற்றாண்டுவிழாவை இருக்கும் இடங்களிலேயே கொண்டாடவேண்டும் என்ற வேணவாவினால் உந்தப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இன்று, அன்னையின் திருப்பதிக்கு யாருமே செல்லமுடியாதிருப்பினும், தீவகப் பங்குத் தந்தையாக எழுவை தீவிலிருந்து பணியாற்றும் அருட்திரு எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் ஊர்காவற்றுறையில் வசதியான ஒருநாளில் நன்றிப்பலி செலுத்த ஏற்பாடாகி உள்ளது. 1994 ம் ஆண்டு ஆவணிமாதம் 7 ம் திகதி கொழும்பு சாந்தலூசியா ஆலயத்திலும், நீர்கொழும்பு, கட்ற்கரைத்தெரு புனித செபஸ்தியார் ஆலயத்திலும், அன்னையின் நூற்றாண்டு விழாத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

சின்னமடுத் திருப்பதியின் வரலாற்றை நூற்றாண்டு நினைவு மலராக வெளியிடுவதன் மூலம் இத்தல வரலாற்றை மக்கள் நினைவு கூருவதோடு, வருங்காலச் சந்ததியினரும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் இதன் பூர்வீகத்தை அழியவிடாது பாதுகாக்கக்கிடைத்த தருணம் இது. காவலூர்க் கவிஞன் ஞா, ம செல்வராசா அவர்களால் 1962 ம் ஆண்டு எழுதிவெளியிடப்பட்ட இத் திருத்தல வரலாற்றை, காலத்தால் அழியவிடாது அரும் பொக்கிஷமாய்ப் பாதுகாத்து அதை மீண்டும் பதிப்பிக்க ஆர்வலுடன் முன்வந்த திருமதி மேரி யோசேப்பின் இரத்தினம் பிரான்சிஸ் அவர்களுக்கு அன்னையின் அடியார்கள் என்றும் கடப்பாடுடையர்.

''எம் தாயே உம் பாதம் ஓடி வந்தோம்
எம் துயர் தீர்த்தருள் இன்னமுதே
சுந்தர மா மடு வாழும் தாயே,
துணை தந்து காப்பாயே எந்நாளுமே''

இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்கள் அனைவரும் விரைவில் இத்திருத்தலம் வந்துசேர அன்னை மரியாள் அருள்பாலிப்பாராக.

மலராசிரியர்
எஸ்' எம். யோசெவ்



தீவகப் பங்குத்தந்தை
அருட்திரு எஸ். இயூஜின் பிரான்சிஸ்
அடிகளார் வழங்கிய

# ஆசியுரை

சின்னமடுச் செபமாலை அன்னையின் ஆலயநிர்மாண நூற்றாண்டு விழாவை நினைந்து மலர் ஒன்று வெளியிடுவதையிட்டுநான் மகிழ்ச்சியடகிறேன். தற்காலப் போர்ச் சூழல் காரணமாக அன்னையின் திருப்பதி பொலிவிழந்து காணப்பட்டாலும் அவளின் திருப்பதியை நாடி ஓடி வேண்டுதல் புரிந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் உள்ளங்களில் அது அருள்நிறைந்து காணப்படுகின்றது அபயம் என்று சொன்னால் அன்பாய்த் தூக்கி நெஞ்சில் வைத்து என்றும் காக்கும் அன்னையின் புகழ் இம்மலரினால் மணம் கமழ எனது நல்லாசிகள்.

| | |
|---|---|
| பங்குத்தந்தை | அருட்திரு |
| தீவகம் | ச. இயூஜின் பிரான்சிஸ் |
| ஊக்காவற்றுறை. | |
| *16 - 06 - 1994* | |

# சுவாமி சந்திரசேகரர்

வண. விஸ்திரினி சுவாமியாரவர்கள் தீவுப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்து மறைப் போதகம் செய்துவந்தகாலை சரவணைக் கிராமத்திலும் வேதவித்து இவரால் விதைக்கத்பட்டது அங்கு குடிபதியாயிருந்த வள்ளுவ வகுப்பாரும், பிராண உபகாரி வகுப்பாரும் சுவாமியார் அவர்களின் போதனைக்குச் செவிசாய்த்து, சத்தியவேதத்துக்குட்பட்டு, திருமுழுக்குப் பெறலாயினர். இவர்கள் பழங்கத்தோலிக்கரைப் போன்று ஞானக் கடமைகளை வழுவாமல் அனுசரிப்பதிலும், குருமாருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதிலும் எட்டுணையேனும் பின்நிற்கவில்லை. அங்ஙனமிருந்தும் காலஞ்செல்லச்செல்ல பிறசமயவாதிகளின் நெருக்கிடை யினாலும் கல்வியறிவு குன்றிய காரணத்தினாலும் ஞான அருட்சிக்கு கத்தோலிக்க சூழலும், கத்தோலிக்க ஆலயமும் இல்லாமையாலும் இவ்விரு குலத்தவர்களும் வேதக்கடமைகளை அனுசரியாமலும் மாதமொருமுறையாயினும் திருப்பலிப் பூசையில் பங்குபற்றாமலும். வீட்டிற்தானும் செபிக்கவோ செபமாலை ஓதவோ அக்கறை கொள்ளாமலும் வாழாவிருந்தனர். பின்னர் முற்றாகவே கத்தோலிக்கர் அல்லாதாரைம் போன்றே சீவியத்தை நடத்தளானார்கள்.

அவ்வமயம், ஊர்காவற்றுறைக்குக் கட்டளைக் குருவராக நியமனம் பெற்ற வண. சந்திரசேகரர் சுவாமியார், ஊர்காவற்றுறை நாரந்தனைப் பங்குகளைப் பொறுப்பேற்றதும் சரவணைக் கிராமத்தில் வண. விஸ்திரினி

சுவாமிகளால் திருமுழுக்குப் பெற்ற புதிய கிறிஸ்தவர்களின் ஞான விசாரணைக்காக அங்கு சென்றிருந்தார். அப்போது கட்டையன் நாவிதன் என்பவரையும் அவரைச் சார்ந்த ஒருசிலரையும் தவிர ஏனையோர் முற்றிலும் கத்தோலிக்க சமயத்தைத் துறந்து, வேத மந்திரங்களை மறந்து பழையபடி சைவசமய அனுட்டானிகளாக மாறியிருப்பதைக் கண்டார்.

இதனைக் கண்டதும் மிகவும் மனமுடைந்து மீண்டும் இவர்களை உத்தம கத்தோலிக்கராக்க வழிதேடினார், பலநாட்கள் சிந்தித்து, ஈற்றில் சரவணைக் கிராமத்தில் இவர்களுக்கெனப் பிரத்தியேகமாக ஒரு பாடசாலையும், ஆலயமும் அமைப்பதே சாலச் சிறந்த வழியென முடிவு கட்டினார். இம்முடிவுக்குப்பின் நாரந்தனையில் செல்வம் செல்வாக்குப் பெற்றவரும், அரச பதிவுகாரரும் பிரபல வைத்தியருமான நீக்கிலாப்பிள்ளை பேதுருப்பிள்ளை என்பவரைக் கண்டு தன் உள்ளக் கிடக்கையாவையும் கூறித் தனக்குப் பத்து ஏக்கர் காணி சரவணையில் வாங்கித்தரும்படி கோரினார். இவரது கோரிக்கையை ஏற்ற பேதுருப்பிள்ளை அவர்களின் பெருமுயற்சியால், சரவணை சின்ன விதானையார் சந்ததியில் வந்த செல்லப்பாவின் காணியில், பத்து ஏக்கர் வாங்கிக் கொடுத்தார். காணி வாங்கியதும், எவ்வித தாமதமுமின்றி 1894 ம் ஆண்டு பாடசாலையைத் தாபிக்கலானார். இதுவே சின்னமடுச் செபமாலைமாதா ஆலயப் உற்பத்தியாவதற்கு முதல் அத்திவாரமாகும்.

சின்னமடு பரிசுத்த செபமாலைமாதாவின்

# பூர்வீக ஆலய அமைப்பு

பாடசாலை அமைக்கப்பட்டதும் அங்குள்ள சிறார்களைச் சேர்த்து, மாதகல் பாவிலுப் பிள்ளைச் சட்டம்பியாரின் கண்காணிப்பில் பாடசாலையை ஆரம்பித்து நடத்தலானார். இதன்பின் ஆலயத்துக்குக் கொட்டில் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவது கொட்டில் தற்போதுள்ள ஆலயத்துக்கு மேற்கே பனைமரத்தூண்கள் நாட்டப்பட்டு கிடுகினால் தட்டிகட்டப்பட்டு, பனை ஓலையினால் வேய ப்பட்டு அமையப்பெற்றிருந்தது. இவ்ஆலயக் கொட்டில் அமைப்பதற்கு வண. சந்திரசேகரர் அடிகளாருடன் வலக்கையும் இடக்கையுமாய் நின்று உழைத்தவர்கள் மாதகல் பாவிலுப் பிள்ளைச் சட்டம்பியாரும், சரவணைக் கட்டை யருமாவர்.

சுவாமி சந்திரசேகரரின் விருப்பப்படி அவசர அவசரமாய்க் கோவிற் கொட்டில்வேலை முடிந்ததும் அங்கு பூச்சியமாய்வைத்து வழிபாடு செய்வதற்கு ஒரு செபமாலைமாதா சுரூபம் இல்லாதது ஒரு குறையாய் இருந்தது. புதிதா கவொரு சுரூபம் செய்துமுடிப்பதற்குக் காலம் போதாமையினால் ஊர்காவற்றுறையில் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்த செபமாலை மாதா சுரூபத்தை எடுத்துவரத் தீர்மானித்தார். ஊர்காவற்றுறையில் நடப்பு நாட்டாண்மை மிக்கவரும், பரம்பரைச் செல்லவந்தருமான

தொம்மைக்குட்டி என்பவரிடம் மேற்குத்தெரு அண்ணாவி மனவலையும் அழைத்துக் கொண்டு சென்ற சந்திரசேகரர் அடிகளார், புனித யாகப்பர் ஆலயத்திலிருக்கும் செபமாலைமாதா சுரூபத்தைச் சுரவணைக் கோவிலுக்குத் தந்துத வும்படி கேட்டார். தொம்மைக்குட்டியவர்கள் சாக்குப்போக்கு எதுவும் சொல்லாமல், ''சுவாமி யாருக்கு விருப்பமாயிருந்தால், நாங்கள் தருவத ற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை,'' எனக் கூறி உடனடியாகவே யாசப்பர் ஆலய மூப்பர் யக்கோப்பிள்ளை அவர்களையும், அடைப்ப னார் வஸ்தியாம்பிள்ளை அவர்களையும் கண்டு அவர்களின் சம்மதத்தையும் பெற்றனர், சுவாமியாருடன் எல்லோரும் கோவில் குரும னைக்குச் சென்று மாதா சுரூபத்தைப் பார்வை யிட்டனர். தேடுவார் அற்ற நிலையில் தூசி படிந்து, முகவொளிமங்கி ஒரு மூலையில் இருந்த சுரூபத்தைக் கண்ணுற்ற தொம்மைக்குட்டியா ருக்கு இந்தக்கோத்தில் சுரூபத்தைக் கொடுக்கத் தயங்கினார், எனினும் சுவாமியார் விரும்பி யதால், ஓர் பழந்துணி எடுத்து அதனைத்து டைத்து, தன் சால்வையால் மூடி, சுவாமியா ரிடம் ஒப்படைத்தார்.

சுவாமியார் மாதா சுரூபத்தை மனமுவந் தேற்று தொம்மைக்குட்டி அவர்களையும், அண் ணாவி மனவல் அவர்களையும் தன்னுடன் மாட்டுவண்டியில் ஏற்றிக்கொண்டு சரவணைக் குப் புறப்பட்டார். செல்லும் வழியில் கோவி லுக்குக் காணி வாங்கிக்கொடுத்த அரசாங்கப் பதிவுகாரர் பேதுருப்பிள்ளை அவர்களையும்

சேர்துத்க்கொண்டு சென்றனர். இவர்கள் நால்வரும் சரவணையை அடைந்ததும், மாதகல் சட்டம்பியாரும், சரவணைக் கட்டையரும் துணைசேர ஆடம்பரங்கள் எதுவுமின்றி சுவாமி சந்திரசேகரர் அவர்கள் சுரூபத்தை ஆசீர் வதித்து மிக்க பூச்சியமாகப் பீடத்தில் ஏற்றிவைத்தார்

சரவணைத் திருப்பதியில் கிருபாகனம் கொண்டெழுந்தருளிப் பக்தகோடிகளுக்கு கேட்டவரமெலாம் தட்டாமல் அள்ளிக் கொடுக்கும் புதுமையுள்ள செபமாலை மாதாவின் உண்மை வரலாறு இதுவேயாகும். வேறுசிலர், இச்சுரூபம் ஊர்காவற்றுறைப் புனிதமரியாள் ஆலயத்திலிருந்துதான் சின்னமடுவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது தவறான கூற்றாகும்.


---

குறிப்பு:- மேற்கூறிய சம்பவத்தை நாரந்தனையைச் சேர்ந்தவரும், வண சந்திரசேகரர் சுவாமியார் காலத்திலிருந்தே குருமாருடன் நெருங்கியதொடர்புடையவரும் சின்னமடுத் தேவாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அவ் ஆலயத்தில் வேலை செய்தவரும், முதுகிழவரும், இந்நூலை எழுதியபோது சீவந்தராய் இருந்தவருமான வஸ்தியாம்பிள்ளை சவிரிமுத்து அவர்கள் ''தங்களுக்கு வண. சந்திரசேகரர் சுவாமியாரே இச்சம்பவத்தை நேரில் சொல்லியுள்ளார்'', என்று எனக்குக் கூறியிருக்கிறார்.

(நூலாசிரியர்)

இச்சிறுநூலை எழுதுவதற்கு ஆதாரமாக உதவியது வண. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய XXV Years Catholic Progress என்றும் நூலாகும். மற்றும் குறிப்புக்கள் காலங்கண்ட முதியோரிடமிருந்து கேட்டறிந்தவையாகும்.

— காவலூர்க் கவிஞன் ஞா. ம. செல்வராசா



# முதற் பூசைப்பலி

திருச் சுரூபம் வைக்கப்பட்டபின் 1895 ம் ஆண்டு ஆடிமாதம் 14-ம் திகதி முதற் பூசைப்பலி இந்தக் கொட்டிற்கோவிலில் நிறைவேற்றப்படலாயிற்று. பின்பு அதே ஆண்டு ஆவணிமாதம் 4 ம் திகதி இரண்டாவது திருப்பலி செலுத்தப்பட்டது. இந்த இரண்டாவது திருப்பலி நிறைவேற்றப்பட்ட தினத்தில் முப்பத்து மூன்று சைவசமயத்தவர்கள் கிறிஸ்து மறையைத் தழுவித் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டனர் என வரலாற்றுக் குறிப்புகள் வாயிலாக அறியமுடிகிறது.

பரிசுத்த செபமாலை மாதாவின் நாமத்தால் சரவணையில் எழுப்பப்பட்ட இப்புதிய ஆலயம் புதுமைகளால் நிறையப்பெற்று சாதி சமய வேறுபாடின்றி நாட்டின் நானா திசைகளிலும், பற்பல ஊர்களிலுமுள்ள மக்களை ஒருங்கே கவர்ந்திழுக்கலாயிற்று. சனிக்கிழமை தோறும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தேவதாயாரைத் தரிசிப்பதற்காக வருகைதரத்தொடங்கினர்.

ஆரம்ப நாட்களில் நாரந்தனையிலும் அயற் கிராமங்களான, நாரந்தனை, சாட்டி, அல்லைப்பிட்டி, சுருவில், கரம்பொன் ஊர்காவற்றுறை மக்கள் மாத்திரம் வழிபாடு களுக்கு வந்து போவராயினர் பின்னர், செபமாலை மாதாவின் அருள்மழை பெரு வெள்ளமாகப்பரவியதும் 1896 ம் ஆண்டுமுதல் சில்லாலை, இளவாலை, பண்டைத்தரிப்பு நாவாந்துறை, யாழ்ப்பாணம் முதலாமிடங் களிலிருந்தும் பெருந்திரளானமக்கள் கூட்டங் கூட்டமாக வீதிவழியே செபமாலை பிரார் த்தனை செபித்துக்கொண்டு பவனியாக வரத்தொடங்கினர்.

காலகதியில், பெரியமடு, தலைவில்லு முதலாம் திருத்தலங்களுக்கு யாத்திரிகர்கள் செல்வதைப்போன்று யாழ்மறைமாவட்ட த்திலிருந்து மாத்திரமல்ல நாட்டின் பலபா கங்களிலுமிருந்து சரவணைத் திருப்பதிக்கு பக்தர்கள் வருகைதர ஆரம்பித்தனர். பெரியமடுவைப் போன்ற பக்திவிசுவாசமும், நம்பிக்கையும் சரவணைத் திருப்பதியிலும் பிரவாகித்து' விளங்கியதனால் மக்கள் இத்திருத்தல்த்தை ''சின்னமடு'' என்று அன்போடு அழைத்துவரலாயினர். தீவுப்பகுதி அனைத்துக்கும் தேவதாயாரின் வழிபாட்டுக்கு இது ஓர் முக்கியதலமாகவும், மத்திய யாத்தி ரைச சேத்திரமாகவும் விளங்கிவருகின்றது. இத்திருப்பதியிலே இறைவனின் கிருபாகடாட் சம் நிறைந்திருப்பதைக் கண்டயாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய யூலன் ஆண்டகை 1909 ம் ஆண்டு இப்பதியை ஓர் திருயாத்திரைத் தலமாக அங்கீகாரஞ் செய்தார்.

1896 ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஆவணிமாதம் 5 ம் திகதி சின்னமடுச் செபமாலை மாதா திருநாள் கொண்டாடப் பட்டு வரலாயிற்று. முதல் முதலில் இங்கு திருநாள் கொண்டாடப்பட்ட பொழுது 6000 மக்களும் அடுத்து ஆண்டில் 13,000 மக்களும் கலந்து கொண்டனர். திருப்பதி பிரபல மடையவே பக்தர்களின் எண்ணிக்கை 15,000 மிரமாகப் பெருகியது அந்நாட்களில் கால்நடை யாகவும் மாட்டுவண்டிகளிலுமே மக்கள் யாத்திரை வருவது வழக்கம். ஆங்காங்கே தண்ணீப் பந்தல்கள் யாத்திரிகளின் களைப் பையும் தாகத்தையும் தீர்த்தன. 1950 களுக்குப் பின்னர் போக்குவரத்து வசதிகள், பேரூந்துப் பயணங்கள் அதிகரித்தமையாலும், பண்ணை, புங்குடுதீவு பாலங்கள் அமைக்கப்பட்டமை யாலும் குறிகாட்டுவான் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டதனாலும் பல்லாயிரக்கணக் கான அடியார்கள் இத்திருப்பதிக்கு வருகை தருகின்றனர். விழாக்காலங்களில் வெள் ளம்போல் பக்தர்கூட்டம் இத்தலத்தில் திரம்பிவழியக் காணலாம்.

ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந் தனை சுருவிற் பங்கு மக்கள் நவதின ஆராதனைகளைப் பகிர்ந்து கொண்டாடி வருகின்றனர். நாரந்தனை தனியான பங்குத் தளமாகப் பிரிக்கப்பட்ட நாள்முதல் இத்திரு ப்பதி நாரந்தனைப் பங்குத்தந்தையின் பரிபா லனத்தின் கீழ் இருந்து வருகின்றது.

## ஆலயத் திருத்தங்களும் வேறுபணிகளும்

1907 ம் ஆண்டில் வண. டோறாச் சுவாமி யார் காலத்தில் புதிய ஆலய (இன்று உள்ளது) நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின எனத் தெரியவருகிறது. வண. டோறாச் சுவாமி யாரால் அமைக்கப்பட்ட குருமனை இன்றும் அங்கிருக்கக் காணலாம். பின்பு யாத்திரீகரின் மடமும் அமைக்கப்படலாயிற்று. யாத்திரீகர் மடம் கட்டுவதற்கான நிதிஉதவியை வழங்கிய வர் அப்பொழுது மலேயாவில் அரச ஊழியரா யிருந்த திரு. S. C. பொன்னையா ஆவார். முன்பிருந்த பலிப்பீடம் "சில்லாலைத் தம்பி வைத்தியர்" என்றழைக் கப்பட்ட சூசைப்பிள் ளை அவர்களால் உபகரிக்கப்பட்ட தாகும்:

வண. டோறாச் சுவாமியவர்களால் ஆரம் பிக்கப்பட்ட ஆலய நிருமாணப்பணி வண. வேளாண்டர் அடிகள் காலத்தில் நிறைவு செய்யப்பட்டது என அறிய முடிகிறது. 1990 ம் ஆண்டுவரை இவ் ஆலயத்தைப் பரிபாலித்து வந்த நாரந்தனைப் பங்குத்தந்தையர்களால் காலத்துக்குக்காலம் திருத்த வேலைகள் மேற் கொள்ளப்பட்டன.

இன்று ஆலயத்துக்குமுன்பாக அமைந்திருக்கும் சிலுவைக் கட்டடம் தன் மகளுக்கு செபமாலை மாதா சுகமருளியதற்கு நன்றியாக சரவணை சின்னப்போடியார் என்பவரால் 1935 ம் ஆண்டு அமைக்கப்பட்ட தாகும். இத்தலத்துக்கு திரு நாட்காலத்தில் வரும் யாத்திரீகர்களுக்கு தாக சாந்தி அளிப்பதற்காக நீண்டகாலமாக

யாழ்பாணத்தைச்சேர்ந்த சைவப்பெரியார் இராமையா அவர்கள் தற்காலிகமான தண்ணீர்த் தொட்டி ஒன்றை அமைத்து குடிநீர் வழங்கிவரலானார். அவரின் மறைவுக்குப்பின், இப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவந்தவர் கரம்பொனைச் சேர்ந்த வர்த்தகரான சவிரிமுத்து இன்னாசிமுத்து ஆவார். 1932ம் ஆண்டு இவர் ஆலய வளவில் ஒரு தண்ணீர்த் தொட்டியைத் தமது செலவில் கட்டி இப்பணியை ஆற்றிவந்தார்.

காலஞ்செல்லச் செல்ல, கட்டையர் குடும்பத்தாரும், மற்றும் அயலில் உள்ளவர்களும் ஆலயத்துக்கு காணிகளை உபகரித்தனர். தற்போது ஆலயக் காணியின் விஸ்தீரணம் 19 ஏக்கர் எனத் தெரியவருகின்றது. சின்னமடு றோ. க. தமிழ்க்கலவன் பாடசாலை முன்பிருந்த இடத்துக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப் பட்டுள்ளது. ஆலயத்தின் மேற்கு எல்லைக்கும் வீதிஓரமான எல்லைக்கும் காப்பரண்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இன்று ஆலயத்தினுட் காணப்படும் மரப்பீடம், சில்லாலை வைத்தியர் இன்னாசித்தம்பி, அவர்களரல் உபயமாக்கப்பட்டது.

முற்காலத்தில் ஆலய விழாவின்போது கொடியேற்றுவதற்காக, ஊர்காவற்றுறை புனித இயாகப்பர் ஆலயத்திலிருந்தே கொடி மரம் கொண்டுவரப்படுவது வழக்கமாயிருந்தது. இன்று இவ் ஆலயத்துக்கென ஒரு கொடி மரத்தை பக்தர் ஒருவர் உபகரித்துள்ளார்.

இந்த ஒரு நூற்றாண்டு காலமாக இவ் ஆலயத் திருப்பணிக்கு முன்னின்று உழைத்த குருக்ள், திருப்பணியாளர், கோவிற்பணியாளர் உபகாரிகள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இத்திருத்தலத்தை மேன்மையுறச் செய்து அன்னைமரியை மகிமைப் படுத்திய மறை ஆயர்கள் அனைவரையும் அன்னை மரியாள் ஆசிர்வதிப்பாராக.